தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை சார்பில், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மான்போர்ட் மெட்ரிக்குலேஷன் பள்ளியின் ஏற்பாட்டில் நடைபெற்ற பல்லாவரம் குறுவட்டத்தில் அடங்கியுள்ள பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டு போட்டிகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் துவக்கி வைத்து, வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பதக்கங்களை வழங்கினார். அருகில் கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி.பாபு, தலைமை ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உள்ளனர்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

நேற்று முன்தினம் (1 – 8 – 2025) நிகழ்வுகள்!

1. உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிக்கொல்லி பயன்பாடு தடுப்பு நடவடிக்கை என்ன?

பொள்ளாச்சி – கே. ஈஸ்வரசாமி கேள்வி

உணவு தானியங்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றில் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால் உடல்ந லத்திற்கு தீங்கு விளைகிறது என்பதை சுட்டிக்காட்டி திமுக பொள்ளாச்சி மக்களவை தொகுதி உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

பூச்சிக்கொல்லிகள் கொண்ட உணவு தானியங்கள் மற்றும் நீர் மற்றும் காற்று மாசுபடுவதால் அனைத்து வகையான பறவைகளின் எண்ணிக்கையும் மெதுவாகக் குறைந்து வருகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இந்த சூழ்நிலையை சரிசெய்ய அரசாங்கம் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கை என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

3. இலவச மருந்துகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் திட்டங்களை அமுல்படுத்துமா ஒன்றிய அரசு?

காஞ்சிபுரம்–ஜி.செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை கேள்வி

தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் நாடு முழுவதும் அரசு இலவச மருத்துவ பரிசோதனை முகாம்கள் மற்றும் மருந்து சேவையை தொடங்கும் திட்டங்கள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் ஜி. செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர். அதன் விவரங்கள் பின்வருமாறு.

இத்திட்டங்களின்கீழ் பொது சுகாதார நிலையங்களில் இலவசமாக வழங்கக் கூடிய அத்தியாவசிய மருந்துகள் மற்றும் நோய் கண்டறிதல் சோதனைகளின் எண்ணிக்கை என்ன?

துணை சுகாதார மையங்கள் (SHCs), ஆரம்ப சுகாதார மையங்கள் (PHCs), சமூக சுகாதார மையங்கள் (CHCs), துணை மாவட்ட மருத்துவமனைகள் (SDHs) மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் இந்த முயற்சிகளை தமிழ்நாடு அரசு எந்த அளவிற்கு செயல்படுத்தியுள்ளது என்கிற விவரங்கள்?

தமிழ்நாட்டில் உள்ள பொது சுகாதார வசதிகளில் அத்தியாவசிய மருந்துகள் தடையின்றி கிடைப்பதையும், நோயறிதல் சேவைகள் சரியான நேரத்தில் வழங்கப்படுவதையும் உறுதி செய்வதற்கு மத்திய அரசிடம் ஏதேனும் கண்காணிப்பு வழிமுறை உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இலவச மருந்துகள் மற்றும் நோயறிதல்களை மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் நோயாளிகளின் செலவினத்தை மேலும் குறைக்க ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை?

4. விளிம்புநிலை மக்களுக்கான இலவச சட்ட உதவி வழங்க நடவடிக்கை என்ன?

சி.என். அண்ணாதுரை கேள்வி

எஸ்.சி./எஸ்.டி, பெண்கள் மற்றும் பிற விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்குவதற்காக அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களின் விவரங்களை திருவண்ணாமலை திமுக மக்களவை உறுப்பினர் சி. என். அண்ணாதுரை கேட்டுள்ளார்.

அரசு இவ்வாறு சட்ட உதவிகள் வழங்குகிறது என்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில் தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தால் (NALSA) எடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் சட்ட உதவி வழங்கப்பட்ட எண்ணிக்கை என்ன?

NALSA உள்ளிட்ட சட்ட சேவைகள் ஆணையங்களின் செயல்திறன் மற்றும் செயல்பாட்டைக் கண்காணிக்கவும் மதிப்பிடவும் அரசு ஒரு வழிமுறையை வகுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் நாடு முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் இலவச சட்ட உதவி வழங்கலை வலுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

5. தரமற்ற மருந்து உற்பத்தியாளர்களுக்கு தண்டனை என்ன?

வேலூர் – கதிர் ஆனந்த் கேள்வி!

தர சோதனைகளில் தரமற்றவை என அறிவிக்கப்பட்ட மருந்து நிறுவனங்களுக்கு எதிராக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட எச்சரிக்கை நடவடிக்கை மற்றும் தண்டனை நடவடிக்கைகள் என்ன என வேலூர் திமுக மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளார்.

'நிலையான தரம் இல்லாத' (NSQ) மருந்துகளை உற்பத்தி செய்யும் மருந்து நிறுவனங்கள் காளான்களாக பெருகி வருவது குறித்து அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) அரசு ஆய்வகங்களால் 'நிலையான தரம் இல்லாத' (NSQ) மருந்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் தயாரிப்பு உரிமங்களை உடனடியாக நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

6. விளிம்புநிலை மக்களுக்கான இலவச மருத்துவ உதவி வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

கள்ளக்குறிச்சி டி.மலையரசன் கேள்வி

பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியுள்ளவர்கள், எஸ்.சி/எஸ்.டி மக்களுக்கு மருத்துவ உதவிகள் மற்றும் மருத்துவம் தொடர்பான பொருளாதார உதவிகள் வழங்கும் திட்டமான ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் (ABDM) திட்டத்தின் தற்போதைய நிலை என்ன என கள்ளக்குறிச்சி திமுக எம்.பி. டி. மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்நாடு மாநிலத்தில் இன்றுவரை ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்கின் (ABHA)கீழ் பதிவுசெய்யப்பட்ட மொத்த குடிமக்களின் எண்ணிக்கை என்ன?

ABDMஇன் கீழ் கிராமப்புற சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார வசதிகளின் டிஜிட்டல் உள்கட்டமைப்பு செயல்நிலை குறித்தும் அரசாங்கம் நடத்தியுள்ள ஆய்வுகள் என்ன?

தரவு தனியுரிமை, சைபர் பாதுகாப்பு அல்லது ABDM சுற்றுச்சூழல் அமைப்பின் கீழ் குடிமக்களின் சுகாதாரத் தரவை தவறாகப் பயன்படுத்துவது குறித்து நிபுணர்களால் எடுத்துக்கூறப்பட்ட பிரச்சினைகளை அரசு கணக்கில் எடுத்துள்ளதா?

அப்படியானால், இந்த பிரச்சினைகளுக்கு தீர்வாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் ABDM கட்டமைப்பின் கீழ் குடிமக்களின் தரவு பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

உங்களுடன் ஸ்டாலின் என்ற முன்னெடுப்பின் கீழ் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் ஒன்றியம் அத்திப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற திட்ட முகாமில் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கலந்து கொண்டு மக்களுக்கான தேவைகளை மனுக்களாகப் பதிவு செய்து உடனடியாக விண்ணப்பித்தவர்களுக்கு சான்றிதழ்கள் அரசு சார்பில் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உடன் மு.பகலவன், வெ.அன்புவாணன், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, பா.செ.குணாசேகர், ஒன்றியச் செயலாளர் ஏ.ஆர்.டி.உதயசூரியன், எம்.டி.ஜி.கதிரவேல், பா.து.தமிழரசன், சங்கீதா அன்பழகன், எஸ்.சங்கர், உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்

தி.மு.க. இளைஞர் அணி

தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித் தொகை மற்றும் பொற்கிழியாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 20 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.5,00,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து, இந்த நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

ஜூன் மாதத்திற்கான நிதி உதவிகளைப் பெறும் 20 பயனாளிகளின் விவரம் வருமாறு :

வ. எண்	பெயர், முகவரி
1	ர.முகமது சைஃப்பான், த/பெ முகமது ரபி, 55, அம்மன் கோயில் தெரு, கண்டோன்மென்ட், குமணன் சாவடி, பூவிருந்தமல்லி, திருவள்ளூர் – 600 056.
2	சே.கயல்விழி, த/பெ சேகர், 1/433, கார்த்திகா கார்டன், தேவர்கண்டநல்லூர், குளிக்கரை, திருவாரூர் – 613 704.
3	ஆ.சண்முகநாதன், த/பெ ஆறுமுகம், 16, அக்கரைகுளம் வடக்கு சாலை, நாகப்பட்டினம் – 611 001.
4	எஸ்.திரேஸ் கலா, க/பெ ராஜன், 8/84–சி, மேற்குத் தெரு, காரங்காடு, கல்குளம், கன்னியாகுமரி – 629 809.
5	மா.மரியசெல்வம், க/பெ மாயாண்டி, 408, இந்திரா நகர், கீழநத்தம் வடக்கூர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 353.
6	வீ.காவியா, த/பெ வீரமுத்து, 18/55, சைவ முத்தையா 5–வது தெரு, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
7	ந.ஜம்புலிங்கம், த/பெ நமசிவாயம், 20/32, முதல் தண்டபாணி கோயில் தெரு, புவனேஸ்வரிப்பேட்டை, குடியாத்தம், வேலூர் – 632 602.
8	க.ரிஷி, த/பெ கமலக்கண்ணன், எட்டிப்பட்டி அழகிரி நகர், ஹெச்.அக்ரஹாரம், அரூர், தருமபுரி – 636 903.
9	ர.கோவிந்தராஜன் த/பெ ரமேஷ், 2–ஏ, முனையாடுவார் நாயனார் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002.
10	சி.சக்திவேல், த/பெ சிங்காரம், 13/11–ஏ, செட்டிக்குளத் தெரு, அனந்தபுரம், செஞ்சி, விழுப்புரம் – 605 201.
11	கு.விஜய் ஆதித்யா, த/பெ குமரன், 108, 3–வது தெரு, கன்னிகாபுரம், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை – 600 078.
12	ந.செல்வகுமார், த/பெ நவநீதகிருஷ்ணன், கரிமேடு, இரயில் நிலையம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் – 631 209.
13	அ.முஹம்மது ரபிக், த/பெ அப்துல் பாஷீத், 98, ராஜ வாய்க்கால், முஸ்லிம் தெரு, தாராபுரம், திருப்பூர் – 638 656.
14	பி.அனிதா, த/பெ பிச்சைக்குட்டி, 20, பாரதியார் வீதி, பெருந்துறை, ஈரோடு – 638 052.
15	ம.செல்வபிரதாப், த/பெ மல்லிங்கேஸ்வரன், 54/4, பெரியாண்டவர் கோயில் தெரு, போடிநாயக்கனூர், தேனி – 625 513.
16	ஏ.ஆட்லின், த/பெ ஏசுதாஸ், ஏ–1, ஈஸ்வரன் நகர், போத்தனூர், கோயம்புத்தூர் – 641 023.
17	எ.கலைஞர், த/பெ எத்திராஜ், 5/6, 4–வது தெரு, புதுமண்டி, சாமி பிள்ளை நகர், ஆம்பூர், திருப்பத்தூர் – 635 802.
18	மை.முகமது பைசூல், த/பெ மைதீன் அப்துல் காதர், 15–7/5–ஏ, காமராஜர் தெரு, பேரையூர், மதுரை – 625 703.
19	ரா.பூஜா, த/பெ ராஜா, 2/61–ஏ, முனியப்பன் கோயில் தெரு, காளிப்பட்டி, மருளையம்பாளையம், நாமக்கல் – 637 501.
20	ஜே.ஏ.தெபோரா ஜூலியட் லீலி, க/பெ மார்டின் லூதர் கிங், 1–2/3, பாண்டியன் நகர் 2–வது தெரு, தத்தனேரி, கூடல் நகர், மதுரை – 625 018.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02.08.2025

கலைஞர் 100 1924 - 2023

உடலுறுப்பு தானத்தில்

தமிழ்நாடு முதலிடம் - ஒன்றிய அரசு விருது வழங்கியுள்ளது!

'நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் தொடக்க விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் புகழாரம்!

சென்னை, ஆக. 3 -

உடலுறுப்பு தானத்தில் தமிழ்நாடு முதலிடம் ஒன்றிய அரசு விருது வழங்கப்பட்டுள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் தொடக்க விழாவில் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று (02.08.2025) சென்னை, சாந்தோம் செயின்ட்பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல் நிலைப்பள்ளியில் இருந்து "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தை தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார்கள். இந்நிகழ்வில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆற்றிய உரை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றிக்கொண்டிருந்த போது தமிழ்நாட்டிற்கு கூடுதல் சிறப்பாக தமிழ்நாட்டின் மகுடத்திற்கு இன்னொரு வைரக்கல் என்கின்ற வகையில் ஒன்றிய அரசின் சார்பில் தற்போது ஒரு விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது உடல் உறுப்பு தானம் வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் இடம். மாண்புமிகு ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா அவர்கள் நமது மாநில அரசின் தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன் அவர்களிடம் சற்று முன் 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய விருது வழங்கி இருக்கிறார்கள் என்பதை தற்போது மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்புதானம் வழங்குவதில் இந்தியாவிற்கே தமிழ்நாடு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது என்றால் 2008 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டு வந்த உறுப்பு மாற்று சிகிச்சைகள் ஆகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2023 செப்டம்பர் 23 ஆம் தேதி ஒரு சிறப்பான அறிவிப்பை வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பு என்பது மூளைச் சாவு அடைந்து உறுப்பு தானம் வழங்குபவரின் உடலுக்கு அரசு மரியாதை வழங்கப்படும் என்பதாகும். இந்த அறிவிப்பிற்கு பிறகு 479 பேர் உடல் உறுப்பு தானம் செய்து அவர்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மட்டும் 268 பேர் உடலுறுப்பு தானம் செய்து இந்தியாவில் மட்டுமல்ல உலகளவில் தமிழ்நாடு ஆயிரக்கணக்கான உயிர்களை காப்பதில் முதன்மையான மாநிலமாக இருக்கின்றது. அந்தவகையில் இந்த திட்டத்தில் தமிழ்நாடு முதல் மாநிலமாக ஒன்றிய அரசு அறிவித்து டெல்லியில் தேசிய விருது வழங்கப்பட்டிருக்கிறது என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.